DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 39 /2021
Miscellaneous -

Sessions -

Deposition of witness for PW1
Defence

Name : Ravichandiran

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 25th October 2025.

எதிரிக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சிக்கு குவிமுச 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் குறக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

அசா.1 எங்கள் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ நகலைதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதன் அசல் நீதிமன்றத்தால் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. எனது நிறுவனத்தில் நான் மேனேஜிங் பாட்னராக இருப்பதன் ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது புகாரிலும் முதல் விசாரணையிலும் எதிரிக்கு ரூ.50000/- பணம் கொடுத்ததாகவும் அதற்கு ஈடாக பிராமசரி நோட் பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிராமசரி நோட்டை எந்த தேதியில் எதிரிக்கு எனக்கு கொடுத்தார் என்று புகாரிலோ முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எதிரிக்கு நான் பணம் கொடுத்து அதற்கு ஈடாக புரோநோட்டை பெற்றுக்கொண்டேனே் என்றாலும் எதிரி எனக்கு பணம் கொடுக்காததால் மேற்படி புரோநோட்டின் அடிப்படையில் வழக்கு காசோலையை பெற்றேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை எதிரி 20.10.2020 அன்று தான் என்னிடம் கொடுத்தார்.

எதிரியிடமிருந்து பெற்ற புரோநோட்டை வைத்து சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. எதிரி என்னிடம் பெற்ற கடனை முழுமையாக செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பெற்ற பணத்தை 12 தவணைகளாக திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல.

எதிரி எனக்கு திருப்பி செலுத்திய பணத்திற்கு நான் ரசீது எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் என்மீது நம்பிக்கையின் காரணமாக எதிரியும் ரசீது எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு கொடுத்த பணம் அனைத்தும் வங்கி பரிவர்த்தனை மூலமாக கொடுக்கப்பட்டது. ரொக்கமாக எந்த பரிவர்த்தனையும் எங்களுக்குள் ஏற்படவில்லை. பொதுவாக ரொக்கமாக கொடுத்தால் அதை நாங்கள் பெற்றுகொண்டு வங்கியல் செலுத்துவோமா என்றால் இல்லை. நாங்கள் ரொக்கமாக பெறுவதில்லை. வங்கி பரிவர்த்தனை மூலமாகதான் பணத்தை பெறுவோம்.

எங்கள் நிறுவனத்தில் யார்யார் எவ்வளவு பணம் பெற்றுள்ளார்கள் என்று எங்கள் வங்கி கணக்கில் தெரியவரும் என்றால் சரிதான். எனது வங்கி பரிவர்த்தனை எதுவும் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் ஆண்டு தணிக்கை செய்வோமா என்றால் செய்வோம். அந்த தணிக்கை அறிக்கையை நீதிமன்றததில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி புரோநோட்டை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தவணை முறையில் பணம் செலுத்தியது புரோநோட்டில் காண்பிக்க முடியாது என்பதால் எதிரியை மிரட்டி வழக்கு காசோலையை பெற்று எதிரி மீது இந்த தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட்டை வைத்து வழக்கு தாக்கல் செய்தால் சட்டப்படி செல்லாது என்பதால் எதிரியை மிரட்டி வழக்கு காசோலையை பெற்று எதிரி மீது இந்த தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒம்)/- Xxxx,
நீதித்துறை நடுவர்,
வானூர்.